முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1029

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.07.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்கார பிரம்மமே அரங்கா வாழ்க
ஓங்கார ஞானமே தேசிகா வாழ்க
ஓங்காரக்குடில் படைத்த ஞானியே வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் உமக்கு
2. உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 08 நாள், 24.07.2022 ஞாயிற்றுக்கிழமை)
உரைத்திடுவேன் கலியுகம் காப்புப்பெற
குறைவிலா ஞானமோடு தர்மத்தை
குருவாக நின்று நீ என் சக்தியாக
3. ஆகவே கலிதனில் அற்புதத்தை
அரங்கா நீ நடத்தி வருகின்றாய்
வரம் தந்து யானும் உந்தனுக்குள்
வல்லமைகூட்டி உயர் தொண்டர்களை பெருக்கி
4. பெருக்கியே சன்மார்க்கம் என்கின்ற
பெரும்வித்தை உலகமெங்கும் பரப்பி
கருணைபட உன்னோடு சூட்சும வடிவில்
கந்தவேலன் உலகமெங்கும் ஞானம்
5. ஞானமதை பரப்பி வருகின்றேன்
ஞானதேசிகன் உன் நாமம் சொல்லும் அன்பர்க்கெல்லாம்
ஞானமாக யானே இறங்கி அருளுகின்றேன்
ஞானவழி இந்த கலியில் உன் சக்திகொண்டே
6. சக்திகொண்டுதான் உலகோர் இலகுவாக
சாற்றிடுவேன் முழுமை காணக்கூடும்
பக்தி என சித்திஎன உந்தன் வழி
பழுதின்றி உலகோர் இணைந்து வர
7. வருகவே இந்த பரமானந்த கதியை
வையகத்தார் அடைந்து அழியாமை எனும்
என்கின்ற பேரின்ப உயர் நிலையை
இந்த கலியுகத்தில் உலகோர் அடைய நேரும்
8. நேர்மைபட உன் நாமம் சொல்லி
நிலவுலகில் தர்மத்தை கைக்கொண்டால்
வறுமையிலா வரும் பிறவியிலா
வையகத்தார் சிறந்து ஞானிகளாக நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–